உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# மித்தியாவாதமர்த்தனம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத்தக.

இது

மதுரை:

பாண்டியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884:

உ

# சிவமயம்.

## விஞ்ஞாபனம்.

உயர்குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, ஒழுக்கமுதலியவற்றானோங்கிய

### நல்லோர்களே!

நாம் எழுதும் இப்பத்திரிகையை, நீங்கள் தயைகூர்ந்து நன்றாகவாசித்து, இதில்உள்ளவைகள் சாத்திரத்துக்கும், யுத்திக்கும், அநுபவத்துக்கும் ஒத்தவைகளோ அல்லவோவென்று ஆராய்ந்து ஒத்தவைகளாயிற் கொள்ளுங்கள்; ஒவ்வாதவைகளாயிற் தள்ளுங்கள்.

---

சற்சனசகவாசம், கல்வியென்பவற்றின் மணமுமகன்ற "சுவாமிநாதபிள்ளை" யென்னும் பெயர்கொண்ட வோர்நன்மரத்தை ஆசிரயித்து, அதன்மறைவில்நின்று, பலதூஷணத்திரப்பிரயோகஞ்செய்து வாணாளைவீணேகழிக்கும் பேடிமைத்தொழில் அகன்ற **ஸ்ரீ இராமசுவாமிப்பிள்ளாய்!**

சைவசம்பிரதாயவமைதி, இலக்கணவமைதி, தருக்கவமைதி, விழுமியசொல்லமைதி, விழுமியபொருளமைதி யென்றிவைமுதலியவாகத்தனக்கு ஒருதலையான் வேண்டப்படுஞ்சுகுணவிசேடங்கள் முழுவதூஉம் நிரம்பி, தொலாநாவின் மேலோர் நெறியைவழுவாது கடைப்பிடித்து, "சமன்செய்துசீர்தூக்குங்கோல் போலமைந்தொருபாற்கோடாத சான்றோர்" குழாங்கட்கெல்லாம் ஒப்பமுடிந்து, அக்குழாங்களானுச்சிமேற்கொண்டு மெச்சிடப்பட்டு, எத்துணைக்கலைவல்லோரானுமறுக்கப்படாத சத்தியவாதமயமாய் நிலமலைபோலநிலவுறவெழுந்த **அடங்கன்முறையாராய்ச்சி** யென்னும் பத்திரிகையினமைந்த அரும்பொருள் முழுவதையும்உய்த்துணர்ந்தடங்கத்தக்க கல்வியறிவு சிறிதுமின்மையானும்; நும்மை விழுங்கியெழுந்த துரகங்கார துரபிமானங்களானும்; "கொடிறும் பேதையுங்கொண்டது விடாதெனும்படியே" பிடித்த தேசாதிக்கும் விதண்டாவாத முதிர்ச்சியானும், அதனைமறுக்குதுமெனப்புகுந்து, நீ[illegible]ம் நுமது வெள்ளறிவுச்சமுதாயமும் பலகாலமாகப் பலதலையாகப் பலவாற்றானலக்கழிந்திடர்ப் பட்டமைத்துக் கிடைபோந்த, மௌட்டிகவிருத்தியளைந்து, தௌட்டிகவிருத்திவிளைந்து, அசப்பியாபாசவிருத்திபொதிந்து, மித்தியாவாதமயமாகக்கிளம்பிய **"அடங்கன்முறையாராய்ச்சி........மறுப்பு"** என்னுங்குளறுபடையால், அதுபரமாணுப்பரிமாணமேனுமறுக்கப்படாத பிரபலமுடைத்தென்பது அச்சான்றோர் யார்க்கும் இனிது விளங்குமன்றே. அஃதங்ஙனமாக, அக்குளறுபடையை நாம் மறுக்கப்புகுதல் மகாபாணப்பிரயோகத்திற்கு முயலையிலக்காக்குவோர்முயற்சியோடொக்கும்: ஆயினும் அதனைக்குளறுபடை யென்றியமாட்டாது, "கெதானுகெதி" நியாயமாகக்கொண்டாடும் பேதைகள் மயக்கந்தீர்ந்து உண்மையுணர்ந்து உய்யும்பொருட்டும்; மித்தியாவாதாந்தகாரங்குடிகொண்ட நு

மர்க்கு நல்லறிவுச்சுடருதிக்கும்பொருட்டும் நாம்எழுதும் இப்பத்திரிகையால். நும்போலிமறுப்பு ஊழிமாருதமுகத்துப் பூழிபோலவும்; சண்டவெங்கனல் முகத்துப்பஞ்சுத்துய்போலவும் நிலையழிந்து நிரசனமுறுவதை நன்கு தெளிந்து இனியாயினும் அடங்குதிர் அடங்குதிர்.

ஞானசம்பந்தப்பிள்ளாய்!

நீர் நுமது பத்திரிகை ஆரம்பத்திற்றானே, "கீழோர்க்கு" எனப்பிறரை யிகழ்ந்துரைக்கு முகத்தால், "நிலத்திற்கிடந்தமைகால் காட்டுங் காட்டுங் குலத்திற்பிறந்தார் வாய்ச்சொல்" என்றவாறே நுங்குலவியல்பின்னதென்பதையும்; பிறரைக்கீழோர் என்றிகழ்ந்து, நும்மை மேலோர்என்று புனைந்துரைக்குமுகத்தால், "பணியுமாமென்றும் பெருமை சிறுமை யணியுமாந்தன்னை வியந்து" "அற்றமறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறிவிடும்" என்றவாறே, நுங்குணஞ்செயல்களினியல்பின்னதென்பதையும் நன்றாகவிளக்கிவிட்டீரே. ஒருவர்குணங்குற்றங்களை நாடற்குப்பிரதானகருவி அவர்செயல்அல்லவா? "பெருமைக்குமேனைச்சிறுமைக்குந்தத்தங் கருமமே கட்டளைக்கல்" என்னுந்திருக்குறள் எழுந்ததும் அதுபற்றியன்றோ! நல்லோர்பிறர்குற்றம் நாடுவரோ? இதுநிற்க இனியப்பாற் செல்வாம்.

"கல்வியுஞ்செல்வமும் கீழோர்க்கு அற்பமுண்டாயவழி இறுமாப்பர்" என்ற நுமது ஆபாசவாசகங்கள், அவ்விரண்டும் அவர்க்குப்பெரிதுமுண்டாயவழி இறுமாப்படையாரென்னும் பொருளைத்தந்து மூதுரையோடு முரணி நுமது வெள்ளறிவு முதிர்ச்சியைப்பொள்ளெனப்புலப்படுத்திவிட்டனவே. அல்லதூஉம்; கீழோர்க்கு அற்பமுண்டாயவழி இறுமாப்பரெனவே, மேலோர்க்கு அதிகம்உண்டாயவழி இறுமாப்பரெனப்பொருள் போதரவும் புலம்பினீரே.

"கல்விசெல்வங்கள் அற்பமுண்டாயவழி இறுமாப்பர்" என்றதற்கு ஆன்றோர் கூற்றுக்காட்டவந்தநீர், செல்வத்திற்கு மாத்திரங்காட்டி, ஏனையதற்கு அதுகாட்டாமை, குன்றக்கூறலென்னுங்குற்றமாயிற்றே.

"கீழோர்க்குச்செல்லும் ஆன்றோர்கூற்றுக்கள்...............கலிகாலமகிமையினாலே தாங்களேதங்களை மகாவித்துவான்களெனக்கூறுமேலோர்க்கும் பற்றுவன." என்றீர். அவ்வாறு தங்களைத்தாங்களே மகாவித்துவான்கள் எனப்புகழ்ந்துரைக்குமேலோர் யாவரோ? திருக்கடைக்காப்புமுதலியவற்றில் அங்ஙனம் தம்மைப்புகழ்ந்துரைக்கு மியற்கை, சிவானுபூதிச்செல்வராகிய திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலியோர்க்குண்டாகலால் அவர்கள்தாமோ? அல்லது வடநூலார் நாந்திமுதலியவற்றிற் புகழ்ந்துரைப்பதுண்டாகலின் அவர்கள்தாமோ? அங்ஙனந்தம்மைப்புகழ்ந்துரைக்குமேலோர் பின்னைவேறுயாவரோ? திருவாய்மலர்ந்தருளுக.

இவ்வாறே நுமது வழுவாசகத்திரட்டிலுள்ள குற்றங்களையெடுத்துவிரிக்கப்புகின்வரம்பிலவாகப் பெருகுமென்றெண்ணி இத்துணையில் விடுத்தேயப்பாற்செல்வாம்.

## கற்பனாதோஷபரிகாரம்.

அடங்கன் முறையாராய்ச்சியென்று வெளியிட்ட உமதுபத்திரிகையில் வேறெவைகளையோ வீணாகக்குழறிவழிதல் மற்றொன்று விரித்தல்என்னும் இ

லக்கணக்குற்றமன்றோ!" என்றுகூறி வேறுஞ்சிலவற்றைப் பிதற்றினீர். நுமதுமந்தமதிக்குப்புலப்படாதபொருளையுடைய வாக்கியங்களை மற்றொன்று விரித்தலெனனுங் குற்றமென்று பிதற்றவெங்கேகற்றீர்? அடங்கன் முறையாராய்ச்சி—அடங்கன்முறைமைபற்றிய வாராய்ச்சி யெனச்செம்பொருள்கொண்டடங்கு முறையறியாது, நூல்மேலேற்றித்தடுமாறியநீர்தாமோ மற்றொன்று விரித்தல்என்னுங் குற்றங்காணவல்லீர்? அப்பத்திரிகைமுதலிலன்றி அதன்இறுதியில் "அடங்கன்முறை" யெனவெழுதிய வாற்றானும் அப்பொருள் நன்றாக வலியுறுத்தப்பட்டதன்றோ! அதனையுமுணராத முசலாக்கிரம்போலு நுமதுபுத்திசாலவும்வியக்கற்பாற்றே. அது அங்ஙனம் பெயரெச்சமாகப்பொருள்விரியுமாற்றை, "பொருள்செயல்வகை, வினைசெயல்வகை" யெனவருவனவற்றாலறிந்து அடங்குதிர். இதனால்வாதிகூறியபொருளை யநுவதிக்கமாட்டாமையாகிய தோல்வித்தானத்துட்பட்டீர். படவே அதுபற்றியவேனைய பிதற்றல்களும் பயனற்றொழிந்தன. இப்படிக்கிளம்பியநீர் 'கலைக்கோட்டுத்தண்டு' முதலிய பெயர்களில் மற்றொன்றுவிரித்தல் கற்பியாததென்னையோ? மறந்தீரோ?

முதல்வரியில் வடமொழியுபசர்க்கத்தையும் தமிழ்மொழியையுங்கூட்டி ஆன்றோராட்சியுஞ் சொற்பொருளுணர்ச்சியும்நோக்காது "துர்ப்பொருமை" யென்றீர்" என்றீர் வடமொழியுபசர்க்கத்தையும் தமிழ்மொழியையுங்கூட்டி யான்றோராளவில்லையென்று வாய்ப்பறைபறைந்தநீர், நுமதுவழுவாசகத்திரட்டில் "துர்க்குறி" யென்றுபிதற்றிய தென்னையோ? ஓஓ அத் 'துர்க்குறி' நுமக்குத்தோன்றவில்லையோ? குதர்க்கபாண்ட்பிரயோகவேகத்தினால் மறந்தீரோ? அல்லதூஉம் கேடுவருமுன்னர் மதிகெட்டுவருமன்றோ! ஐயையோ, துர்ப்பொருமையகற்ற வெழுந்தநுமக்குத்துர்க்குறிவந்து சூழ்ந்ததே! பாவம். பாவம். வடமொழியுபசர்க்கமுந்தமிழ்மொழியுங்கூடிப்புணரும் பொருத்தந்துர்க்குறிக்கேயன்றித்துர்ப்பொருமைக்கில்லை யென்பீர்போலும். நன்றுநன்றும்முளக்குறிப்பு. அதுநிற்க, "பரிமாறுதல், துன்னெறி, அதிநுட்பம், துன்னடை, துர்ச்செய்கை, துர்ப்பழக்கம்." எனவழக்கினும், செய்யுளினும் வழங்கிய வழக்கை இனிஎன்செய்வீர்? அங்ஙனம்வழங்கிய ஆன்றோர் ஆட்சிகளையும் இனிப்புரட்டயோசிப்பீர். அவைகளும் பொருத்தமில்லையென்று புலம்பாத தென்னையோ? அவர்கள் மாட்டுமிதூர்ந்த கருணைதான் காரணமோ? நும்புலம்பல்செல்லாதென்றதுதான் காரணமோ? ஆன்றோராட்சிகளையெல்லாம் வரம்புகண்டசீமான் நீரேயன்றோ! அல்லதூஉம், பிரயோகவிவேகம் பிரயோகவிவேகம் என நுமதுபத்திரிகையிற்புலம்பி அதனைமிகப்படித்தவர்போல நடித்துக்காட்டினீரே. அந்நூலிற்றானே, "பரிமாறுதல் வடமொழியுபசர்க்கம்பெற்ற தமிழ்வினைச்சொல்" எனக்கூறியிருப்பதைத் திருக்கணசாத்தவில்லையோ? அந்நூற்பெயரை யெங்கேகேட்டுப்பாடம்பண்ணினீர்? சற்றே தலைநிமிரும் பார்ப்போம். பரிமாறுதலென்பது மடநல்லார்க்குந்தெரியுமே. அவர்களேயதனை நுமக்குவிளக்கித் தலைகுனிவிக்கவல்லரன்றோ! இனித்"துன்னெறிச்சேதுவோ" "துன்னெறியமைச்சரும்" எனவும், "அதிநுட்பம்யாவுளமுன்னிற்பவை" எனவும், கந்தபுராணத்தினும் திருவள்ளுவரினும் பிறவற்றினும் பரந்துவழங்குமாற்றை நுஞ்செவிமண்டமுழக்கினார் ஒருவருமில்லையோ? ஏனையவுமன்ன.

சம்ஸ்கிருதத்திலுஞ் சிலதெரிந்தவர்போல துர்ப்பொருமையென்பதற்குத் துர்க்ஷமாபாவம எனமுறையில் புணர்ச்சிசெய்துகாட்டிப்பொருள் விரிக்க

வந்தீரே, சபாசு! சபாசு! பொருமை என்பது அழுக்காறு என்றும் க்ஷமைஎன்பது பொறுமை யென்றும் அறியாது தமொறியசீரா வடநூற் பண்டிதர்! "கற்றது உமின்றிக்கணக்காயர்பாடத்தாற், பெற்றதாம் பேதையோர்சூத்திரம்-மற்றதனை நல்லாரிடைப்புக்கு, நாணுதுசொல்லித்தன் புல்லறிவுகாட்டி விடும்" என்றஆன்றோர் வாக்குப்பொய்படுமோ? தான்கிடப்பதுகுட்டிகைச்சுவர் களுக்காண்பது மச்சுமாளிகையா?

இரண்டாவது வரியில் "ஒருசிறிதுமற்ற" என்றது சுற்றமென்றீர். வினையிலக்கணம் வெகுவாகத்தெரிந்த மகாவித்துவசிரோமணி நீரன்றோ! சிறிதும் என்பதன்முன் "அற்ற" என்னும் வினைகொடுக்கலாகாதென்ற விதி யெங்கே கற்றீ ? அத்தலைவிதியெடுத்துச்சற்றேவெளிவிடும் பார்ப்போம். 'சிறிதும் என்பது என்னசொல்? அசனும்மையாத? அற்ற, தவிர்ந்த, இல்லாத, ஒழிந்த என்னும் வினைகளின் வேறுபாட்டைச்சற்றே காட்டுவிடுக. சிறிதுமில்லாத, சிறிதுமற்ற என்பவைசம்முள் வேற்றுமையென்னையோ? நீர் எடுத்துக்காட்டிய "முற்றுமொழிந்த" என்பதுமுதலியன, ஒருசிறிதுமொழிந்த என்பதுமுதலிய வாகக்கூறுமிடத்து அப்பொருள்படாவென்றது, சொற்பொருளுணரத்தக்க நுண்ணறிவில்லாமையன்றோ! இனிச்சூரியனைச் "செங்கதிரோன்" எனக்கூறுதலுங்குற்றமென்பீர். "காக்கைகரிது" என்றலும் குற்றமென்பீர்! இவ்வாறுகாண்டல் விரோதங்கூற வெங்கேகற்றீர்? கற்றுரோடு உரையாட, நீர் எண்ணிய வெண்ணம் "முலையிரண்டுமில்லாதாள் பெண்காமுற்றற்று" அன்றே!

இங்ஙனம் நீர்கற்பித்த தோஷங்களெல்லாம் பரிகரிக்கப்பட்டன. நீர்கற்பித்த தோஷங்களுள் ஒவ்வொன்றும் நுமதுமதிமயக்கத்தாலும், பெரியோரோடு மருவாமையாலும், உயர்ந்தகல்வி கேள்விகளில்லாமை யாலும், அடங்காமையாலும் வந்தனவேயாமென்று பெரியோர்உம் மைச்சிரியாது விடமாட்டார்.

## போலிவிடைத்துரப்பு.

### போலியுத்தரப்பிள்ளாய்!

கஈ, கடாக்களையும் எண்முறையே நேரியவிடைகளால் அசற்றுவோமெனத் துள்ளிக்கிளம்பிய நீர், கூ-வது கo-வது கடாக்களையுஞ் சிலம்பாலிவிடைகளாலகற்ற நினையாததென்னை? மறந்துபோனீரோ? இரக்கம்வைத்து விட்டீரோ அனல், விடைதரத்தும் அவசரமுநீங்கிய நீர் என்செயவீர்! உமது புளுகுகளையுஞ் செயல்களையும் பார்க்கும்வழி, மங்கையர்க்குத்தன் வலியைத்துரைத்துப்புளுகிக்கிளம்பிய விராட புத்திரனாகிய **உத்தரன்** செயலாயமுடிந்தனவே. "சொல்லுதல்யார்க்குமெளிய வரியவாஞ்சொல்லியவண்ணஞ்செயல்" என்னுமருமருந்தன்ன உறுதிவாக்கை நினைவிற்பரித்துய்குதிர்.

க-வது "வேண்டுகோள்" என்பதற்குப்பிரார்த்தனை யெனப்பொருள் கொண்டது மயக்கமென்றும்; அதற்கு விருப்பங்கொள்ளுதல் பொருள்என்றும், அதற்கு "வேண்டுதல்வேண்டாமை" என்னுந்திருக்குறள் பிரமாணமென்றும பிதற்றிக்கிளம்பினீரே. நீர்தானு கடாக்களை நேரியவிடைகளாலகற்றப்புறப்பட்டீர். வாரும். வாரும். "வேண்டுகோள்" என்பதற்கு விருப்பங்கொள்ளுதல்பொருளென்பதை யெங்கேகற்றீர்? எங்கேகேட்டீர்? வேண்டுகோள்என்பதற்கும், "வேண்டுதல் வேண்டாமை" என்னுந்திருக்குறளுக்குஞ்

சம்பந்தமென்னை? அன்றோராட்சியும் பொருளுக்குமுடையீர் நீரன்றோ! நல்லது. நல்லது. "வேண்டுகோள்" எனக்கூறுதல் அசைவசம்பிரதாயமென்றவழி; அதற்குப்பொருள் "விருப்பங்கொள்ளுதல்" என்று கூறிப்புரட்டவந்த நீர், அவ்விருப்பங்கொள்ளுதல் எனக்கூறுதலும் அசைவசம்பிரதாயமென்ற வழி, எக்குறள்பிரமாணங்காட்டிப் புரட்டவருவீரோ! அறியேம். இனி "கோள்" என்பது கிரகமாதலின், வேண்டுகோள் என்பதற்கு விரும்புங்கிரகமெனப்பொருள்கூறி, அதற்குத்தாற்பரியம் விரும்புங்கிரகசாரமெனச்சொல்லி, அதற்குப்பிரமாணம் "மழைக்கோள்" என்றெடுத்துக் காட்டிவிடுவீர். அதுவும் அசைவசம்பிரதாயமென்றவழி, "கோள்" என்பதற்குக்குற்றமென்னும்பொருளாதலின், வேண்டுகோள் விரும்புங்குற்றமெனக்கூறி, அதற்குமொருபிரமாணமெடுப்பீர். சும்மாவிடுவீரா? எப்படியும் புரட்டுநெறியிற்கைவந்தனீர்தான். அதுநிற்க, திருவிளையாடற் புராணத்து விறகுவிற்றபடலத்திலே, "ஐயனே யடியேற்கின்றுன்னருட்டுணைசெய்யவேண்டு மெய்யனேயென்றுபோற்றி வேண்டுகொண்டு" "வென்றுபத்திரஞ்செய்து நின்வேண்டுகோள்என்றார்" என்பவற்றில்வரும் "வேண்டுகொண்டு, வேண்டுகோள்" என்பனவற்றிற்கும் விருப்பங்கொள்ளுதல் தான்பொருளா? பின்னர் "மறைகட்கெஞ்சினுரை யின்றிரந்தவாறென்று கண்விழித்தான்" "வஞ்சக்கொடியனேன் குறையிரந்தவாவிளைந்ததேகுற்றம்" என, அவற்றிற்கு க்குறையிரத்தலாகியபிரார்த்தனைப்பொருள் வலியுறுத்தப்படுவதென்னை? கோயிற்புராணப்பாயிரத்திலே, "நல்லோரையிரந்தோ மேல்நகையாமென்றுரையாமால்" என்புழி, "செய்யுட்குற்றம்பொறுக்கப் பெரியோரை வேண்டிக்கொண்டோமாயின், சிரிப்புண்டாமென்று வேண்டிக்கொண்டோமில்லை" யென நாவலருரைத்ததென்னை? பிரயோகவிவேகநூலிலே, திங்குப்படலத்திலே, "எந்தை வருக, எம்மான்வருக,, எனவேண்டிக்கோடலாகிய பிரார்த்தனைக்கண்ணும் வந்தன" எனவந்நூலுடையா ருரைத்ததென்னை? தொல்காப்பியத்துச்சொல்லதிகார வுரையில், "யானுநின்னோடுடனுறைக" எனவேண்டிக்கோடற் பொருண்மைக்கண்வந்தன" எனச்சேனாவரையருரைத்ததென்னை? நன்னூல் வினையியலில், ௧௧-வது சூத்திரவுரையில், "போற்றியருளுக நின்னாதியாம் பாதமலர்" "எங்கொங்கைநின்னன்பரல்லார் தோள்சேரற்க" எனவும்வேண்டிக்கோடற் பொருண்மைக்கண்வந்தன" வெனச்சங்கரநமச்சிவாயப்புலவருரைத்ததென்னை? வேண்டுகோள் வேண்டிக்கோடல்என்பன ஒன்றென்பது அறியீரோ? இன்னும் விரிக்கிற்பெருகும்.

இதுகாறுங்கூறியவாற்றால், வேண்டுகோள் = வேண்டிக்கோடல்களுக்குப்பிரார்த்தனையே பொருளாமன்றி, "விருப்பங்கொள்ளுதல்" பொருள் அன்றென்றும், அங்ஙனம்வழங்குதல் யாண்டுமில்லையென்றும் காட்டுமுகத்தால், தேவாரப்பிரியர்கருதியபொருளே பொருளாமென்று பசுமரத்தாணியறைந்தாங்குநாட்டப்பட்டது, இங்ஙனம் பிரார்த்தனைப்பொருள்கொண்ட தேவாரப்பிரியரைமயக்கமுற்றீரென்றுபிதற்றியெழுந்தநீர், பரஞ்சோதிமுனிவர் முதலியமேலோர்மீதுமயக்கங்கற்பித்துப்பிதற்றியெழாததென்னையோ? அஃதங்ஙனமாக, "வேண்டுகோள்" எனத்திருத்தினோர்கள் **ஸ்ரீகாசிவாசி குமாரசாமிச்சுவாமிகளே** யாமென்று உச்சவிசையோடு கத்தித்தொலைத்தீர். அச்சுவாமிகள் அங்ஙனம் திருத்துவார்களா? திருத்தார்கள்! திருத்தார்கள்! சற்சம்பிரதாயவுணர்ச்சிஎட்டுணையேனுமில்லாதவுமதுபேதைமையை, அவ்வுணர்ச்சிமுற்றுமுடைய அச்சுவாமிகளுக்குமேற்றி நும்மை

ப்பாதுகாத்துக்கொள்ளுமாறு துணிந்தநுமது துணிவையென்சொல்லிவியக்
கேம்! அல்லதூஉம் "திருத்தினார்கள்" என்றநுமது வாய்மொழியால், அது
முன்னும்பிழையுடையதென்பது விளக்கினீரன்றோ! எனனை? பிழையுடைய
தனையன்றோ திருத்தவேண்டுவது. அவர்கள் திருத்தினார்களென்பதைத்தான்
எங்கேவெளியிட்டிருக்கிறீர்? நும்மாற் பதிப்பிக்கப்பட்ட அப்புத்தகத்திற் காட்
டுவீரா? சற்றேபேசும் பேசும். மௌனஞ்சாதியாதீர். எழுந்திரும். நம்மேற்
கோபங்கொள்ளாது உண்மைபேசும். "அச்சுவாமிகளாற் திருத்தப்பட்டது"
என்றிருந்தவழி, அதனைக்குற்றங்கூறினன்றோ, நீர் நுமதுகுற்சிதயுத்தியாற்
கற்பிக்கப்பட்ட குற்றங்கள் தேவாரப்பிரியர்மீது செல்லும். இதனால், நும்மா
லேற்றப்பட்ட பிதற்றல்முதலிய மும்மைக்குற்றங்களும்; ஒப்பில்பெருமைய
ப்பமூர்த்திகளையொறுத்தல்குறித்துச்சமண்கையர்கள்விடுத்த மதகளிறனது
அம்மூர்த்திகளை யணுகலாற்றாது விடுத்தோர்தம்மையேயடுத்துப்படுத்தாங்
கு, நுந்தலைமேற்றாக்கிநும்மைபபிழைபடுத்தியவாற்றைநன்குதெளிந்து கொ
ண்டு, பிறர்மீது அநியாயமாகக்குற்றங்கற்பித்தலாகிய மிகக்கொடியவிழிதொ
ழிலை இனியாயினும் ஒழிந்து, நற்றொழில்களில் முயலக்கடவீர்.

இனி, "வேண்டுகோள்" என்பதற்கு விருப்பங்கொள்ளுதல்தான்பொ
ருளென்றே சாதித்தவழியும், அதுவும் அசம்பிரதாயமே யெனறறிந்தடங்கு
திர். என்னை? "சுவாமிகள் திருவுளப்பாங்கின்படி," "திருவுள்ளப்படி," யெ
னக்கூறுதல் சம்பிரதாயமாதலினென்க. பிள்ளாய்! நுமது புதுச்சைவசம்
பிரதாயத்தால், ஆதீனங்களிலுள்ள பண்டைச்சைவசம்பிரதாயங்களைக்கெடு
த்து மண்போடமுயலாதீர். "பொய்படுமொன்றோ புனைபூணுங்கையறியாப்
பேதை வினைமேற்கொளின" என்றார்பெரியர். நும்போலியர் புகுந்தால் ஆதீ
னசம்பிரதாயங்கள் மிகவளர்ந்தோங்குமே.

உ-வதும் அ-வதும் இராமலிங்கசுவாமிகள் குமாரசாமிச்சுவாமிகள் என்
பவற்றில் ஒன்றில் வல்லொற்றுமிகாமைக்கும், மற்றொன்றில் மிக்கமைக்கும்"
"அற்புதப்பதிகசரிதங்கள் என்புழி ஒருவழிமிக்கமைக்கும் ஒருவழிமிகாமை
க்கும் நியாய மென்னையென்று வினாயினார்க்குச்செவ்வேயிறையிறுக்கவறியா
து "அவ்வாறுவருதலேவிதி" யென்று செப்புவழூஉப்படப்பிதற்றினீரே. அந்
தவிதி எந்த இலக்கணநூலிலே எந்தஅதிகாரத்திலே எந்த இயலிலே எந்தச்
சூத்திரத்திலேயுள்ளதோ? சற்றேதயைகூர்ந்து காட்டலாகாதா? "சேதுபுரா
ணம் கந்தபுராணம் என்பன விகற்பித்துவந்தன" வென்றீர் அதுஎங்கேகண்
டீர்? எங்கேகேட்டீர்? **நாவலர்** பரிசோதித்து வெளியிட்ட சேதுபுராண
ம், கந்தபுராணம் என்னும்புத்தகங்களிலே, முதலிலும், முடிவிலும் அந்நா
மங்களை யெழுதியவழியும்; "புகலுநூற்பெயர்சேதுபுராணமே" "மேலை
யோர் போற்றுகந்தபுராணமதென்பதே" எனச்செய்யுட்களிலும், பிறவிடங்
களினும் இயல்பாக நிற்றலைக்கேட்டுமிலீரா? தமிழ்நாடெங்கும் பரந்துகிடக்
கின்றவப்புத்தகங்களிலொன்றாகுதல் நுங்கண்ணுக்கெதிர்ப்படவில்லையோ?
இனியாயினும் தேடி அவைகளைவாசித்துணர்ந்து நும்மதிமயக்கந்தவிரீரா? "அ
ந்தப்புரமு மறுநான்கு கோட்டகத்தாருமொன்றாய்க், கந்தப்புராணம் பதினா
யிரம்" எனத்தொண்டைமண்டலசதகத்தில் மிக்கதென்பீரேல்; அது எதுகை
பற்றிவந்த தாகலினீண்டைக்கெய்தாதென்பது.

தற்சமம் தற்பவமாகவரும் வடமொழிச்சந்திவிதி தமிழிலில்லையென்று
சொல்ல எங்ஙனந்துணிந்தீர்? அது நுமக்குத்தெரியாவிடிற் பிறருக்குந்தெரியா

தென்றுசொல்ல வாயேது? "ஆதிபகவன், கந்தபுராணம், சேதுபுராணம்" என்பன இயல்பாகநிற்றற்குவிதி "வடமொழியுயிர்முன்வன்கணமியலபாம" என்ற அகத்தியத்தில், எழுத்திலக்கணகாண்டத்தில் எழுத்துப்படலத்தில் ௨௩-ம் சூத்திரத்தாற்றெளிந்து நுமது பேதைமையையகற்றிவிட்டு மடங்கிஒதலைப்பட்டுய்யக்கடவீர். ஆனால் நீர்என்செய்வீர், நும்மையிங்ஙனம்பிசற்றவியதுபுல்லறிவு அன்றோ! அப்புல்லறிவாளருக்கு நல்லறிவுகொளுவுதலரிதென்பதுபற்றியன்றோ "காணாதாற்காட்டுவான்றான்காணான் காணாதான்கண்டானுந்தான் கண்டவாறு" என்றார் தெய்வப்புலவர்.

(௩-வதும் ௫-வதும்) "ஸ்ரீஏகாம்பரநாதசுவாமி" என்பதில் அதுஅடையாகவும், ஸ்ரீஞானசம்பந்ததேசிகசுவாமிகள் என்பதில் அதுஇயற்பெயரினோர் பகுதியாகவும், ஸ்ரீகாசிவாசிஎன்பதில் அதுஅடையாகவும் கொண்டதேயாம்" என்றீர். ஸ்ரீ என்பது திருஞானசம்பந்ததேசிகசுவாமிகளுக்கு இயற்பெயரினோர் பகுதியென்பதை எங்கேகற்றீர்? எங்கேகேட்டீர்? பெயர்ப்பகுதி வினைப்பகுதிகளினிலக்கணங்கள் என்னை? அவையறியவல்லீரா? நும்பகுதியிலக்கணமெல்லாம் இதனால் வெளிச்சமாயினவன்றோ! இங்ஙனங்கொண்டநீர், ஸ்ரீ அனந்தேசுரர்; ஸ்ரீசுப்பிரமணியர்; ஸ்ரீமாணிக்கவாசகர்; ஸ்ரீமத்தெய்வசிகாமணிதேசிகர், ஸ்ரீமத்அப்பதீக்ஷிதர் "எனவருவனவற்றையும் அடையன்றென இனிப்பிதற்றத்துணிவீர்போலும். அடையுண்மை அடையின்மைகளினிலக்கணங்கள் வெகுவாகத்தெரிந்த சீவாத்மா நீரேயன்றோ! இம்மட்டோ திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, திருவள்ளுவர், திருவாசகம், திருவாய்மொழி" எனவருவனவற்றில், திருவென்பதும்அடையன்றெனப்பிதற்றத்துணிவீர் போலும். அற்றேல்; "திருவென்னும்பலபொருள்ஒருசொல் வடமொழியிலே ஸ்ரீஎன்பதுபோலத், தமிழிலேதேவர்கள், அடியார்கள், ஞானநூல்கள், புண்ணியஸ்தலங்கள்முதலியமேன்மையுடைய எப்பொருள்கட்கும் விசேடணமொழியாகி அவற்றிற்குமுன்னாமகிமைப்பொருளையுணர்த்திவரும் ஸ்ரீஅனந்தேசுரர், ஸ்ரீமாணிக்கவாசகா, ஸ்ரீவாதுளாகமம் ஸ்ரீசாலிவாடிபுரம் ஸ்ரீபாதம எனவும், திருமுருகர், திருநாளைப்போவார், திருக்கோவை, திருநெல்வேலி, திருவடி" "எனவும் வழங்குமாற்றாலறிக" என்றும்; "திருவாசகம், திருவாய்மொழியெனஅடையடுத்தவாசகம்;மொழியென்னுமுதற்கருவியின்பெயர்" என்னும் திருமுருகாற்றுப்படையுரையினும், நன்னூல்விருத்தியுரையினும். உரைத்திருப்பதென்னையோ. அங்ஙனம் அவ்வாசிரியர்கள் உரைத்ததும் பிழைதானோ. சற்றேதிருவாய்மலர. அங்ஙனம் கூறிய நீர், பின்னர் "திருஞான சம்பந்தமூர்த்திகள் எனஅடைகொடுத்தும்" எனக் கூறியொழிந்ததென்னை.?

இனி, "இயற்பெயரினோர்பகுதி" யென்றது, அடையன்றென்றதன்று:— அப்பெயரினோர்பாகமென்றதேயெனின்; அதுவும்பொருந்தாது, திருக்கடைக்காப்பு முதலியவற்றிலே "ஞானசம்பந்தன-திருஞானசம்பந்தன்" எனவருளியதன்றி, ஸ்ரீஞானசம்பந்தன் எனவருளாமையினென்க. அற்றன்று; அம்மடபின் திருக்கைச்சாத்து அவ்வாறேயாமென்னின்அதுவும் பொருந்தாது. ஸ்ரீஞானசம்பந்ததேசிக: என்று திருக்கைச்சாத்திடுவதுவடவெழுத்திலன்றித்தமிழெழுத்தன்மையானும், சுவாமிகள்எனப்பின்னடைகூட்டியிடுதலில்லாமை யானுமென்க.

ஸ்ரீ என்பதுகாசிக்கு அடையென்றநீர், அதற்கு முன்னர், "திருப்பனந்தாட் காசிமடாலயம்" எனவடையின்றி வாளாவெழுதித்தொலைத்ததென்

லை ? இங்ஙனம்தெளிற்கஞ்சிப்பாந்தள்வாய்ப்பட்டநியாயத்திற்கினஞ்செய்தீரே.

"ஏகாம்பரநாதசுவாமி, பண்டாரசந்நிதிகள், தம்பிரான்மூர்த்தி ஆகிய மூவரும் தம்முள்ளேசமத்துவமுடையரென்றும், அதற்குப்பிரமாணம் "மாறைநேயமலிந்தவர்வேடமுமாலயந்தானுமரனெனத்தொழுமே" என்பது முதலியதிருவாக்குகள் என்றும் "அத்திருவாக்குகளின்படி யமைந்தமெய்யன்பர் நாமே" யென்றும்சிறிதும்வாய்கூசாதுபிதற்றிக்கழித்தீர். ஆண்டு மெய்யன்பர்எனப்படுவார்சிவஞானிகளன்றோ! அம்மெய்யன்பரொன்பபடுஞ் சிவஞானச்செல்வர்நீர்தாமோ! ஒஒ தேவரீர் இங்ஙனம் எழுந்தருளியிருப்பது சிறியேமுக்குத் தெரிந்திலதே. அஞ்ஞானச்செல்வராகிய நும்மை யடைந்த நமக்கு இனியென்னகுறை? இனி எலும்பைப் பெண்ணுக்கு வீரன்றோ! முதலைவாய்ப் பிள்ளையழைப்பீரனறோ! நும்மாலாகாததொன்றுண்டா? அதுநிற்க; அவசித்தாந்தபண்டித! இறப்பில் தவத்தான் மனந்தூயராய், அயராவன்பினரன்கழல்சென்ற சீவன் முத்தராகிய அணைந்தோர் தன்மையைப் பிரதிபாதித்த "மாலற நேயமலிந்தவர் வேடமு..................தொழுமே" எனபது முதலியதிருவாக்குக்களை; அஞ்ஞானாந்தகாரங்குடி கொண்டுமூடினமையால், விதிவிலக்குக்களை யுணராதுமயங்கி, அவலக்கடலுளாழ்ந்துதடுமாறுகின்ற ஆணவமலரூபியானநுமதுகடைத்தன்மைக்குப்பிரமாணமாகவுபயோகித்தநுமக்கினிக்கிடைக்குங் கதியாதோ? அறியேம் அறியேம்! ஐயையோ, இஃதென்னகொடுமை கலிகாலமகிமை எல்லாங்கண்டனம் கண்டனம். அதுநிற்க, குருலிங்க சங்கமங்களைச்சிவமெனப்பாவித்து வழிபடஆண்டுவிதித்ததேயன்றிச்சிவலிங்கப் பெருமானைக்குருவுக்குச்சமமாகவும், குருவைச்சங்கமத்துக்குச்சமமாகவும் பாவித்துவழிபடும்படிவிதித்தவிதியெங்கேகண்டீர்? சீவன்முத்தர் நீரன்றோ! அடியானை நாயனாகப்பாவிக்கலாம்: நாயனையடியானாகப்பாவிக்கலாமா? ஆசாரியனைச் சிவமாகப்பாவிக்கலாம்: சிவத்தையாசாரியராகப்பாவிக்கலாமா? மந்திரியையிராசாவாகப்பாவிக்கலாம்: இராசாவைமந்திரியாகப்பாவிக்கலாமா? "இட்டனெனக்காண்பரவனேவலரையேவலரென், றிட்டனையார்காண்பாரியம்பு. "சிவனைக்குரவனெனச்சிந்தியேலிந்தஅவமதியாலாழ்வரவலத்து" எனவும், சிவனெனவேதேசிகனையன்பரையுஞ்சிந்தி யவரெனக்கண்டார் நிரயத்தார். அரையனெனக்காண்பரமைச்சையமைச்சாவரையனைக்கண்டாற்றுயரமாம்" எனவுங் கூறுஞ் சைவசமய நெறி, சங்கற்பநிராகரணமென்னுஞ்சைவசாத்திரங்களினுண்மைகளுள்ஒன்றையேனுங்கற்றல் கேட்டல் செய்யாது, சீவன்முத்தனென நினைத்துமனப்பால் குடிக்கின்றநுமது தூர்ப்புத்தியிருந்தபடியைச்சொல்லிஆரொடுநோகேம் ஆர்க்கெடுத்துரைப்பேம்!!

இங்ஙனந்தலைதடுமாறும் பேதைமையையுடையநீர், இனி ஈசசதாசிவசாந்தபதப் பேறுடையார், கந்தசண்டகணதீசபதப் பேறுடையார் என்னும் இவர்தம்முள்ளே தாரதம்மியமென்னை! இவர்யாவரும் தம்முள்ளே ஒருவரையொருவர்வணங்கிவழிபடலா மெனமீர்போலும். இங்ஙனங் கொள்ளு நீர், அப்பண்டாரசந்நிதிகளுக்குத்தம்பிரான்மூர்த்திகள் செய்யும் வழிபாட்டைப்போலவே இனித்தம்பிரான் மூர்த்திகளுக்குப்பண்டார சந்நிதிகள்வழிபாடு செய்யாலாமென்றும் விதித்தருள் வீர்போலும்.

சிவஞானபோதமுதலிய உண்மைநூல்களினுள்ள அவ்வருமைத்திருவாக்குக்களை எங்ஙனம்பாடம்பண்ணினீர். "தெருளாதான் மெய்ப்பொருள்கண்

டற்ருல்'' என்னுந்திருவாக்குப்பொய்க்குமோ? இன்னவார்த்தை இன்னஇடத்திலே பிரயோகிக்கலாம்; பிரயோகிக்கலாகாதென்னும் நெறியறியாத நும்மோடு இதனைப்பேசுவதும் வீணன்ருே!

"அல்லதூஉம் உயர்வினைச்சுருதினும், நல்லமனிதன், நல்லதேவன், நல்லசிவனென்னுந்தொடர்களில், நல்ல என்னும் பண்பினையுணர்த்துமொழி எல்லைப்படுதலின்றி வருமொழிநோக்கி, நன்மைப்பண்பு நூறுதிகங்களாகநிற்பதுபோல, ஸ்ரீஎன்னும்பண்பும் அவ்வவ்வருமொழிகளுக்கேற்ற வுயர்வினையுணர்த்தும் விசேடணமாகக்கொள்ளினும் அமையும்'' என்றுங்கரைந்தீர். எடுத்ததுக்காட்டெடுத்தலின் மிகுசாமர்த்தியரென்பது இன்றுகண்டனம். நுமதுகையிருப்புங்கண்டனம். அதுநிற்க, நல்லமனிதன் நல்லதேவன் என்பவற்ருேடு 'நல்லசிவன்' என்றுங்கூறினீரே. அவர்யாவரோ? இனித்தீயசிவனுமொருத்தர் உளராவரே: அவர்யாவரோ? அவரையெங்கே கண்டுபிடித்தீர்? அவரிலக்கணமென்னை? ஓ ஓ இனி "நல்லவிநாயகர், தீயவிநாயகர், நல்லமுருகர், தீயமுருகர், நல்லஉமை தீயஉமை'' யென்பவரும் உளராவார்போலும். கேளாதனவெல்லாம் நும்வாயாற் கேட்டறியலாமே.

ஸ்ரீ என்னும் பண்பும் அவ்வவ்வருமொழிகளுக்கேற்ற வுயர்வினையுணர்த்தும் விசேடணமாகுமென்றுநீர் கூறியவாற்ருல், இனி ஸ்ரீசிவன், ஸ்ரீவிஷ்ணு, ஸ்ரீகாடேறி, ஸ்ரீகறுப்பன், ஸ்ரீகாடன், ஸ்ரீகாத்தவராயன், ஸ்ரீஇராமசுவாமி, ஸ்ரீநாய், ஸ்ரீநரி, ஸ்ரீபன்றி எனவுங்கூறிவிடலாமன்ருே! குற்றம்யாதோ? அவ்வவ்வருமொழிகளுக்கேற்ற வுயர்வினைத்தானே யுணர்த்தும்!

"சமயாசாரியர்களும் இவ்வாறு வழங்கினுர்கள்'' என்றுசொல்லித் "திருவருள்'' முதலியசிலதொடர்களை எடுத்தெழுதிநிரப்பினீர். அவ்வாறு வழங்கியதன்றி, திருச்சிவன், திருக்குரு; திருச்சுவாமி; திருவிஷ்ணு; திருப்பிரமாளனவும்வழங்கினுர்களா? இனிஇவ்வாறும் வழங்கலாமென்பீர். அநவஸ்தைமுதலியதோஷங்கள் அளைந்த இந்தஆபாசவிடைகளை யெங்கேதேடிப்பிடித்தீர்? நீர்தான் என்செய்வீர்? உம்மை அறநெருக்கலாகாது. பயனெடுபடாத இப்பாழ்ங்கூற்றுகளை இனிமறந்துவிடுவீர். இன்னும்விரிக்கிற்பெருகும்.

"மேலும் பிரகடனபத்திரத்தின்புறத்தே, கையொப்பங்களை அவ்வாறேயச்சிடக்கருதி, துரியாச்சிரமிகளென்னும் உயர்வுபலருக்கும்புலப்படும் வண்ணம் அவர்களுக்குமாத்திரம் இயற்பெயரோடு சுவாமிகள் சுவாமிஎன்னும் பின்னடைகூட்டி..................அச்சிடுவித்ததேயாம்'' என்றீர். எனவேகருதியதொன்று முடிந்ததொன்றுமாக நுமக்கேபூர்வாபரவிரோதமாய், நுமது வழுவாசகத்தொடர்கள் நுமக்கு இட்டவிகாதம்பண்ணி, நமக்குப்பலந்தந்து நின்றனவே. அம்மட்டோ, "சுவாமிகள்சுவாமியெனமுறையே, மகாசந்நிதானங்களுக்கும் தம்பிரான்மூர்த்திகளுக்கும் பின்னடைகூட்டி அச்சிட்டதேயாம்'' என்றநும்போலிக்கூற்றுக்கள், முன்னர்க் "குருலிங்கசங்கமங்களைப் பேதமறச்சிவமெனக்கண்டு வழிபடுகின்ருேம்'' என்றபோலிக்கூற்றுக்களோடு முரணிப்பூர்வாபரவிரோதஞ்சித்தித்ததே. "இங்ஙனம் அப்பர்சுவாமிகள்'' என்றீர். இனிசம்பந்தர்சுவாமி, சுந்தரர்சுவாமி, மாணிக்கவாசகர்சுவாமி, கந்தர்சுவாமியென்றுங்கூறிவிடுவீர்போலும். இனிஇவ்வுழஉப்புணர்ச்சிக்கு விதியென்னையெனவினுவினுல், "சபாபதிமுதலியார்புணர்த்தினுர்; எழுமலைப்பிள்ளை புணர்த்தினுர்.'' என்றுசிலபிழைமொழிகளைஎடுத்துநிரப்புவீர். விடுவீரா?

"அடைகொடாது அக்குருமூர்த்திகள் கையொப்பமிடுதல் உமக்கு அசம்பிரதாயமெனத்தோன்றிஞல்,............அடைகூட்டித்தீட்டும்படி.........சந்நிதானங்களுக்குவிண்ணப்பம்பண்ணல்வேண்டும்" என்று ஒவ்வொருவரிகளை ஒன்றரைமுழத்தில்எழுதி உளறினீர். ஆதீனசம்பிரதாயஞ்சிறிதுமுணராதபிள்ளாய்! மதுரையாதீனத்து ஸ்ரீசற்குருநாதசுவாமிகளும், திருவண்ணாமலை (குன்றக்குடி) ஆதீனத்து ஸ்ரீசற்குருநாதசுவாமிகளும்; திருமுகமுதலியவற்றிலே, **ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக:** எனவும் **ஸ்ரீமத் தெய்வசிகாமணிதேசிக:** எனவும் அடைகூட்டித்திருக்கைச்சாத்திட்டருளுஞ்சம்பிரதாயங்கேட்டுமிலீரா? இனி ஸ்ரீமத் சங்கராசாரியர், ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் முதலியோரும் அங்ஙனமே. அவையெல்லாம் உணரவல்லீரா? அவர்களெல்லாம் அடைகூட்டித்திருக்கைச்சாத்திட்டருளுதல் நுமக்குஅசம்பிரதாயமெனத்தோன்றிஞல், அடைகூட்டாது இடவேண்டுமென்று, அவர்களுக்கு, இனியாகுதல் நீர்தயைகூர்ந்து விண்ணப்பம்விரைவில்விடுக்கவேண்டும். அங்ஙனம் அடைகூட்டியிடுதல் அசம்பிரதாயமென எண்ணித்தானே அத்திருவண்ணாமலைஆதீனத்துக்குருமரபினர்கள் பரம்பரையாக **ஸ்ரீமத் தெய்வசிகாமணிதேசிக:** எனவிட்டருளுந்திருக்கைச்சாத்தைமாற்றி, அவ்வாதீனசம்பிரதாயவிரோதமாக, நுமது பிரகடனபத்திரத்தின்புறத்தே **ஆறுமுகதேசிகசுவாமிகள்** என்றுவெளியிட்டீர். நல்லது நல்லது, இன்னும்எத்தனைசம்பிரதாயமாறுதல் நும்மாலுண்டாகுமோ? அறியேம். ஆனால்ஆதீனங்களிற் புதிதாய்ப்பழகியசைவராதலின் அங்ஙனஞ்செய்வதும் பொருத்தந்தானே. இதுகாறுங்கூறியவாற்றால்; நீர்கூறியபோலிக்கூற்றுக்கள், மயங்கப்பேதலுட்பட்டமைமேலும், பொருத்தமில்லனவாயும், பூர்வாபரவிரோதமாயும், இழிவழக்குப்பட்டனவாயுஞ்சிதைவுற்றொழிந்தன.

௪-வது. பண்டாரசந்நிதிகளுள்ளே சிலருக்கு விசேஷணங்கொடுத்தும், சிலருக்கு அதுகொடாமையும் எழுதிவிட்டமை குற்றமாமென்று வினவினார்க்கு, யாதோர்நியாயமுங்கூறாது; "திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருநாவுக்கரசுசுவாமிகள் எனஅடைகொடுத்ததும், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகளென அடைகொடாமையும்போலவே யாமுங்கொண்டாம்" என்றும், "அதுமேலோராட்சி"யென்றும் பிதற்றிக்கழித்தீர். முன்னர்க் "கையொப்பமிட்டபடியே அச்சிட்டுவிட்டாம்" என்றதைமறந்தீர். அல்லதூஉம், மேலோராட்சிவெகுவாகத்தெரிந்தநீர், தேவாரப்பிரியர், அடைகொடாமைகுற்றமென்றுவெளிப்படுத்திய பின்னரே; மதுரைப்பண்டாரசந்நிதிகளுக்கும், தருமபுரத்துப்பண்டாரசந்நிதிகளுக்கும் ஸ்ரீ ல ஸ்ரீ கொடுத்து, நும்போலிப்பத்திரத்தில் வெளியிட்டதென்னை? இதனால், சுவர்த்தலைப்பூனைபோலப், பதுங்கிநின்று புரட்டும்புரட்டுக்களெல்லாம் வெளிச்சமாயினவன்றே! இனிச்சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கும்; மாணிக்கவாசகசுவாமிகளுக்கும், அடைகொடுத்து ஆன்றோர்வழங்கவில்லையென்பதை நீர்எங்கேபார்த்தீர்? மாதவச்சித்தாந்தஞானபானுவும், திராவிடபாடிய முனிவருமாகிய **சிவஞானசுவாமிகள்,** "சிவசமவாதவுரைமறுப்பிலே" "ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி, ஸ்ரீமன்மாணிக்கவாசகமூர்த்தி" முதலான" என எழுதிவழங்கியருளியதென்னை? அக்காலத்தில் நீர்இருந்தால், அச்சுவாமிகளை எழுதவிடுவீரா? இனிஅதனையும்புரட்டிவிடயோசிப்பீர்! ஆனால் அதுமுடியாது! முடியாது! அதனை; நம்

மனோர்க்கெல்லாமறிவொழுக்கங்கொளுத்தி நல்வழிப்படுத்தவந்த கிர்த்துவசூடாமணியாகிய **நாவலர்,** பெரியபுராணவசனப்பதிப்பினிறுதியிலுள்ள "நாயனார்வழக்கு" என்பதில் வெளிப்படுத்தியிருக்கின்றாரே. அதுசிறுவர்க்கும் நன்றாகத்தெரியுமே. அல்லதூஉம் "திருநாவலூரர், திருவாமூரர்; திருவாதவூரடிகள்" எனத்திருவென்னும் அடைபுணர்த்திவழங்கியருளிய சேக்கிழார்நாயனார், நம்பியாண்டார்நம்பி, பரஞ்சோதிமுனிவர் முதலியோர்களையென்செய்யப்பார்ப்பீர்? அப்பெரியோர்களுக்கெல்லாம், சொற்சுவையோடு இயைபுமில்லாவிடங்களில், அடையின்றிவழங்கத்தெரியாதுபோலும்! அவர்களுக்கு இவ்வுண்மையை இனியாகுதல் தயைகூர்ந்து நீர்விண்ணப்பம்பண்ணவேண்டும். ஐயையோ! நும்மனம்போனவாறெல்லாம்பிதற்றத்தலைப்பட்டீரே. இதுபற்றியன்றோ! "தேவரனையர்கயவரவருந்தாமேவனசெய்தொழுகலான்" என்றார் தெய்வப்புலமைத்திருவள்ளுவனார்.

௬-வதும் ௭-வதும "கோயிற்றருமகர்த்தராய்" என்பதனை, கோயில்தருமகர்த்தராய் எனவும், "அச்சிற்பதிப்பிக்கப்பட்டது" என்பதனை "அச்சில்பதிப்பிக்கப்பட்டது" எனவும், எழுதினமை, சந்திவழுவேயாமென்பதும்; நீர்சொல்லிய தெளிவு, தொடர், வரிபிரித்தல், சுவையெனப்படுங்காரணங்களில் ஒன்றும் இவற்றிற்கேதுவன்றெனபதும், நும்புல்லறிவுக்குத்தோன்றாவிடின, போப்பையரிலக்கணச்சுருக்கங்கற்ற சிறுவரிடத்தாதல் கேட்டுத்தெளிந்துஅடங்குதிர்.

௯-வது "குறியீட்டிலக்கணம் எங்கேகற்றீர்" என்றும் "அதுபிறபாஷைக்குரித்தாதலால் யாவரும்எவ்விடத்தும் ஆளாமைகண்டிலீர்போலும்" எனறுங்குரைத்திர். புலவர்திலகராகிய **நாவலர்** செய்தநான்காம்பாலபாடங்கற்ற சிறுவர்க்கும் அதுநன்றாகத்தெரியுமே. நுமக்குத்தெரியாததுஅற்புதம்! இனிஅச்சிறுவரிடத்தாகுதல்சென்று பணிந்து கேட்குமாற்றிற்கேட்டால், விளக்குமாற்றின்விளக்கி அக்குறியீடுநன்றாகக்காட்டுவார்கள். கடைப்பிடிக்க. அன்றேல்; அப்பாலபாடப்புத்தகத்தில் ௧௦௧-ம் பக்கத்திற்கண்டுதெளிக. அதுநிற்க, நும்மால்அச்சிற்பதிப்பிக்கப்பட்ட சிலபுத்தகங்களிலும், நும்போல்ப்பத்திரிகையிலும் சிலகுறியீடுகள் காணப்படுகின்றனவே. அக்குறியீடிட்டார் யாவரோ? அதுதோன்றவில்லையோ? மறந்தீரோ? அல்லதூஉம் தற்செயலிழந்து பரபோதச்சீவியராய் நிற்கின்றநுமக்குத்தோன்றாதுதானே! கெட்டிகெட்டி! நுமதுவறுங்கூற்றுக்கள்எல்லாம்தாயைமலடியென்று கூறுமொருமுழுமகன்கூற்றாயமுடிகின்றனவே. இப்படிப்பட்ட காண்டல்விரோதஞ்சாதித்தல் நுமக்கு இயற்கையாகவருகின்றதே. இனி "இதுஎன்கூற்றன்று முதலியார்கூற்று"என்றுசொல்லிவிடலாமே. குறைநுமக்கில்லையே. "வேண்டுகோள்" என்பதற்கு, திருப்பனந்தாளிற்சுவாமிகளைக்காட்டிவிட்டுத்தப்பவழிபார்த்தநீர், இனையனபோல் வனபிறவற்றிற்கும் ஒவ்வொருவரைக்காட்டிவிட்டுமறையமறந்ததென்னையோ? "இனியாவரும் எவ்விடத்தும் ஆளாமையால்" எனவே, "சிலர்சிலவிடத்தாண்டிருக்கிறார்கள்"என்னும்பொருள்போதந்து நுங்கூற்றைப்போலியாக்கிவிட்டதே. மெய்யைப்பொய்என்கின்றீர். பொய்யைமெய்யென்கின்றீர். இனிப்பட்டப்பகலை இரவென்றுங்கூறுவீர்போலும். அக்குறியீடுகள் பலவித்துவான்களாலும்பலபுத்தகங்களிலும் ஆளப்பட்டுப்பிரசித்தியுறுவதைச்சற்றேயெழுந்திருந்து நுங்கண்மயக்கையொழிந்துபாரும். உமதுஅஞ்ஞானந்தீரும்.! இதனால் இறையிறுக்காமைமாத்திரையேயன்றித்தனக்குவருந்தோல்வியைப்பிறிதொன்றுபேசிமறைத்தலென்னுந்தோல்வித்தானமும் எய்தினீர்.

கூ-வது "அங்கேவசிக்கின்ற மதுரைத்திருஞானசம்பந்தசுவாமிகளாதீனத்துச்சிஷயராய்" என்றது "சந்திதியின்மை" என்னுந்தோஷமென்றார்க்கு, அத்தோஷபரிகாரம் யாதொன்றுங்கூறாது, இலக்கணக்கொத்து நூற்பயிற்சி கல்லாடவுரைப்பயிற்சி செய்யவில்லையேயென்றுகூறி அந்நூல்களிலேஅக்குற்றம் மிகவுண்டென்னும்பொருள்போதரச்சிலகூறியொழிந்தீர். "இலக்கணக்கோத்து. கல்லாடவுரை" என்னும்பெயர்களையெங்கேகேட்டுநெட்டுருப்பண்ணினீர்? இலக்கணக்கொத்தின் மணமும்வீசப்பெறுதோய்! அந்நூலிலே, "தகுதியவாய்நிலை" என்னுஞ்சூத்திரத்தையும், அதனுரையையும் நன்குகற்றுணர்ந்த வித்துவான்கள் வாய்க்கேட்டுத்தெளிந்துகொண்டு, அத்தோஷஞ்சாலாது, வாக்கியங்களை எழுதவும் பேசவுந்தலைநீட்டுக. "இலக்கணக்கொத்து" முதலியநூற்பெயர்களைமாத்திரம் பாடம்பண்ணிப்பகட்டுகின்ற இந்தவெறும்பகட்டுகள், பேதைகள்மாட்டுமீநுமக்கு இனிப்பலியாதென்றறிக. கல்லாடத்திலும் வல்லீரென்பது அதிலே, தலைநீட்டினாலன்றோ தெரியும். உயர்ந்தகல்விகேள்விகளானன்று, தலைப்பட்டவித்துவான்கள் வசனமுதலியனசெய்கின்றார்களென்று எண்ணி, "அங்ஙனம் நாமுஞ்செய்வோமென்று" எழுந்தநுமதுஎழுச்சி, "கானமயிலாடக்கண்டிருந்தவான்கோழி தானுமதுவாகப்பாவித்துத் தானுந்தன்பொல்லாச்சிறகைவிரித்தாட"வெழுந்ததுபோலுமன்றோ! நாமஎத்தனைதான் செவியறிவுறுத்தியுமென்னை? நும்மகம்படியுமா? படியாது! படியாது! நுமதகம்படியாமையைநீக்க இறைவனாலுங்கூடாதே. உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமா?

கக-வது "ஓரிடத்து ஒருவராற்பரிசோதித்துப்பதிப்பிக்கப்பட்டது" எனவும், மற்றோரிடத்து ஒருவராற்பதிப்பித்து நிறைவேற்றிய 'எனவும்" வருவதிற்குற்றம்யாது?" என்றும்"அவைவெவ்வேறு வினைகள்"என்றுங்கூறினீர். 'பதிப்பிக்கப்பட்டது' எனவே பதிப்பித்தலாகியவினையாண்டுமுடிந்திலதென்பதைநீர் எவ்வாறுசாதிப்பீர்? அங்ஙனங்கூறியதில் நிறைவேற்றற்பொருளில்லையென்பது முழுமடமையன்றோ! ஓ ஓ பதிப்பித்துவிட்டமையாகிய ஒருவினையை இருவினையெனமயங்கியது நல்வினை தீவினையென்னும் நினைவுபற்றிப்போலும்! அதுநிற்க, "பதிப்பித்துஎன்பதில் விவ்விகுதிதொகையாயிற்று அதுஅந்தர்ப்பாவிதணிச்சென்னும்பிரயோகவிவேக விலக்கணவமைதி" யென்றும்புலம்பினீர். முன்கூறியதைமறந்தீர். பிரயோகவிவேகத்தில் அதிமேதாவியர்நீரன்றோ! நும்முடையவிவேகத்தை யார்தான்மெச்சமாட்டார்! அந்தஅமைதிகண்டநீர் இனி, "ஆசாரியன்மாணாக்கனைப்படித்தான்" என்றுள்எழுதிவிட்டு, "அதிற்பிவ்விகுதிதொக்கது அது அந்தர்ப்பாவிதணிச்சு" என்பீர்போலும். "ஆடிதிங்கள் என்றெழுதிவிட்டு, "இயல்பு மிகலும்விகற்பமுமாகும்" என்றதனால் இயல்பாயிற்றுஎன்பீர்போலும். இலக்கணங்கைகண்டீர். நுமக்கென்னகுறை! இதுமட்டோ? இனித்தெணுக்ஷிமூர்த்திபோக, வடக்கணுமூர்த்தி, மேற்கணுமூர்த்தி,கிழக்கணுமூர்த்தியென்றும்அமைத்துவிடுவீர். தெக்ஷிணாமூர்த்தியைத்தெரிந்தனீரன்றோ! இவ்விதி, இவ்வுழி யமைக்கத்தக்கது, இவ்விதி இவ்வுழியமைக்கத்தகாதது என்னுமிலக்கணப்பாகுபாட்டின் முறையறியாதபுல்லறிவர்வேறென்னதான்செய்வர்? அதுவேயுமன்றி, "அந்தர்ப்பாவிதணிச்சென்னும்பிரயோகவிவேகவிலக்கணவமைதி" என்றது அதிவியாத்தியென்னுந்தோஷசகிதமாகச்சிதைவுற்றதலைத்தருக்கநூல்வல்லார்வாய்க்கேட்டுத்தெளிந்துவாய்மூடுதிர். அதுநிற்க, அந்தவினையை ஏவுதற்கருத்தா இயற்றுதற்கருத்தாவினுமிழுத்துவிட்டுப்புலம்பிச் சிலசொற்றொடர்களையெடுத்தெழுதிப்பத்திரிகையைநிரப்பினீர். ஓராசன் "இத்தேர்என்னாற்செய்யப்பட்டது, இத்தேர்மரத்தி

ரியாற்செய்யப்பட்டது" எனஒருவழிக்கூறுதலியாண்டுமில்லையாக லினதுவும்பொருந்தாதென்க. இதுகாறுங்கூறியவற்றால், நீர்கூறியபோலிவிடைகள் மயங்கப்பேசுதலுட்பட்டுப்பொருத்தமின்றியும, முரணியும்வழூஉநடைப்பட்டுத்தொலைந்தன.

கஉ-வது இயற்பெயருஞ்சிறப்புப்பெயருமாகிய பிரசித்தியற்ற நாமங்களிரண்டையும் உபயோகித்தமை குற்றமேயாமென்று செளிந்தடங்குதிர். அது யார்க்கும் மயக்கமுறுதற்கிடமாதல், சமஸ்தமுமுணர்ந்துவிட்டதாகஎண்ணி இறுமாந்து அகம்படியாமையுற்றுச்சீவன்முத்தநாடகம்நடிக்கின்ற நுமக்குத் தோன்றுமைவிட்டது சாலவுமழகிதே.

கங-வது "தக்ஷிணகைலாசம், பிப்பிலாரணியம், மேலைச்சிதம்பரமென்பது முதலான" என்பதில் ஒருமைச்சொற்புணர்த்தமை குற்றமென்று கடாவிய தறகு, "பிரத்தியேகபந்தாந்நுவயமென்னுமிலக்கண" மென்றுந் "தொழிற்பெயர்" என்றும் மயங்கப்பேசித்தொலைத்தீர். லௌகிகப்பிரக்கிரியை, வைதிகப்பிரக்கிரியையெனப்படும் உலகவழக்குச்செய்யுள்வழக்குகளைப்பகுத்துவரம்பு செய்துணர்ந்தவாக்கன்றே, இலக்கணங்களை யேற்புழியறிந்தமைத்தல்கூடும்: வழக்கின்னது, செய்யுளின்னதுஎன்னும்வேற்றுமைசிறிதுமுணராத, குதர்க்கப்பிரயோகவிவேகவிலக்கணியானநீர், அங்ஙனம் மயங்கியுளறுது பிறிதென்னதான்செய்வீர். மேற்கூறிய அந்நுவயம் "கடுமொழியுங்கையிகந்ததண்டமும் வேந்தனடுமுரண்டேயக்குமரம்" என்னுந்தொடக்கத்துச்செய்யுளிலக்கணவமைதியேயன்றி ஈண்டைக்கெய்தாதென்பதை இலக்கணவிலக்கியங்களையரிறபக்கற்றுணர்ந்தவித்துவான்களிடைக்கேட்டுத்தெளிந்து, வழக்கிலக்கணவமைதிபெற வசனமெழுதத்தலைநீட்டுதிர். தொழிற்பெயரென்றலும் பொருந்தாதென்க. என்னை? ஆன்றோராட்சிமுதலியவின்மையின்.

"அன்றியும், தக்ஷிணகைலாசம், பிப்பிலாரணியம், மேலைச்சிதம்பரம் என்பதுமுதலானஎன்னுந்தொடரில்" எனமீட்டுங்கூறியது, கூறியது கூறலென்னுங்குற்றமென்றறிக. ஓஓ அது அநுவாதமென்றுசொல்லியொழிவீர்போலும் யாதானுங்குளறுதுவிடுவீரா?

இங்ஙனம் பல்லிழந்தகிழவிகளதுபுலம்பல்கள்போன்ற நும்போலிவிடைகள் முதலியவழூவாசகத்திரட்டு, முறையே நிரசனஞ்செய்து தொலைக்கப்பட்டது. நும்முடையபிதற்றல்கள்முழுதும், நன்னெறியொழுகற்கருவியாக நூல்களை முறைப்படவேண்டிக்கற்றுப்புலமைநிரம்புதற்குரிய தவமுதிர்ச்சியில்லாமையானும்; பேதைகளை மருட்டிச்செருக்கித்திரிதற்குமாத்திரம் கருவியாக, அந்நூல்களுட்சிலவற்றை முறைபிறழக்கற்றதனுலுதித்த வெள்ளறிவின்முதிர்ச்சியானும்; முறைப்படிகற்றுப்புலமை நிரம்பியமகாவித்துவான்கள், சொற்சுவை, பொருட்சுவைகளையறிந்து இன்புறுகின்ற நல்லறிவாளர்களால் நன்குமதிக்கப்படுதலைக்கண்டுமீதூர்ந்ததுர்ப்பொறாமையினனும், அகங்காரத்தினனும், விருத்தாப்பியத்தினனும் வந்தனவேயாமெனறு இனியாயினுந் தெளிந்து அடங்குதிர்.

## எச்சம்

"அதிசுலபமாகப்பொருளுணரத்தக்க "இடையேன்வினைகாளிடறேன்மின்னே" என்னுந்திருநாவுக்கரசுநாயனுர்தேவாரத்தில 'வினைகாள்' என்னும்விளிவேற்றுமையை எழுவாய்வேற்றுமையெனச்சாதித்தீர்" என்று, முழுப்பொய்க்கதையொன்று பெரிதாகத்தொடுத்துப் பழிபாவங்கட்கு ஒருசிறிதும் அஞ்சாமல், உமதுதுட்டவாசகபத்திரத்தில்வெளியிட்டீர். ஐயையோ இந்தப்

பொய்க்கதையையெழுதநினைந்த மனமென்படும்! சொல்லியநாவென்படும்! எழுதியகையென்படும்! இதனைக்கொண்டாடும் புல்லரென்படுவரோ? அறியேம் அறியேம்.

நைட்டிகப்பிரமசரியவேடம்பூண்டது அதில்மறைந்துநின்று இன்னோரன்ன பொய்க்கதைகளைக்கட்டிப்பேதைகளைமருட்டி நாடகஞ்செய்தற்குத்தானோ? ஸ்ரீமத் தில்லைநாதபிள்ளை யவர்கள் அங்ஙனஞ்சாதித்ததுண்டானால், அது, எக்காலத்திலே? எவ்வூரிலே! எவ்விடத்திலே? எவர்முன்னிலையிலே? சற்றேவெளிவிடுவீரா? பார்ப்போம். தக்கார்கூடியசபையிலே இதனைச்சாதிப்பீரா? இன்னும் எத்தனை எத்தனை பொய்க்கதைகள்கட்டிவைத்திருக்கிறீரோ அறியேம். 'ஒப்பிலாமலடிபெற்றவொருமகன்முயற்கொம்பேறித் தப்பிலாகாயப்பூவைப்பறித்தமைசாற்றினீரே. அதுநிற்க,

"இடையேன் வினைகாளிடறேனமின்னே" யென்றொருதிருநாவுக்கரசநாயனார்தேவாரம் எங்கேபார்த்தீர்? அத்தப்பேடுஎங்கேஎடுத்தீர்? அத்தேவாரமுழுதையும்வெளிவிடும். வெளிவிடும். முதிர்ந்ததருக்கப்போரில், இத்துணைமடம்பட்டநீர் வேறியாதுதான்செய்யவல்லீர்? பொய்சொல்லினும் பொருந்தச்சொல்லப்பழகினீரில்லையே? ஆனால் எத்தனைதான்பொருந்தச்சொல்லினும் பொய்நிலைக்குமா? நித்தியத்துவங்கேட்கப்புகுந்த கும்பகன்னன் செயலாய் முடிந்ததே நும்மியற்கை. அல்லதூஉம்; உற்றபோரிற்கற்றதுமறக்கக்கன்னனுக்குத்தன்குருவாற் கிடைத்தசாபம்போல; உற்றதர்க்கப்போரில் அங்ஙனம்மறந்துஉளற, நும்பிரதமகுருவாகிய முத்துவீரப்பபிள்ளையவர்கள் இட்டசாபம்தான்காரணமோ? அல்லது, ஊரிலுள்ளபொய்ப்படலமுழுதும் பொதிந்த நும்மியற்கையை, உள்ளவாறு உலகத்தாருக்குவெளிப்படுத்தி. நும்மருட்டிலகப்படாதபடி, அவ்வுலகத்தாரைக்காத்தருளவேண்டுமென நினைந்தருளிய கருணையங்கடலாகிய சிவபெருமான்றிருவருட் பிரேரகந்தான்காரணமோ? அறியேம் அறியேம்!

"அறிவொருசிறிதுமில்லாத மூடசநேந்திரர்களைச்சேர்த்துவைத்துக்கொண்டு" என்பது தொடரிசைக்குறியீடுபெற்றும், "(அன்னோர்செய்தஅருநன்றிகளைமறந்து)" என்பது இயைபிலிசைக்குறியீட்டுளடங்கியும்நின்று தோஷாகிதமாக விளங்குவது, குறியீடுணராத நுங்குருட்டுமதிக்குத்தோன்றாமையற்புதமோ? இங்ஙனம் இலக்கணக்கொத்துரை பிரயோகவிவேகவுரைப்புத்தகங்களிலே பலவிடத்தும்குறியீடிட்டு விளக்கியிருப்பதை அவைகற்றுணர்ந்தார்மாட்டுக்கேட்டடங்குதிர் ஈண்டுக்கூறிற்பெருகும்.

அங்கிலோபாஷையிலக்கமிட்டதனால் வருஞ்சம்பிரதாயதோஷமென்னையோ? அதனை அசம்பிரதாயமென்றநீர், நும்மாற்பதிப்பிக்கப்பட்ட தேவாரப்பதிப்பின்முகத்தே "காப்பிறயிட் றிஜிஸ்டரெட்" என்றதென்னையோ? வெகுசம்பிரதாயியன்றோ! பதின்மூன்றென்னும்எண்நேர்படுதல், அங்கிலோதேசத்தவர்க்குத்துர்க்குறியென்றீர். இந்தமிலேச்சக்கதை யெங்கேகேட்டீர்? கட்டுக்கதைகள் தொடுத்தற்குவல்லீரென்பதும் நன்றுதெரிந்தனம். இனியமைக. அத்துர்க்குறிதானெதிரினும், சிவபிரான்றிருவருள் வழிப்படவொழுகுந்தேவாரப்பிரியரையாதுசெய்யவல்லதோ? இப்படியே உமதுகதைப்புரட்டு, எழுத்துப்புரட்டு, சொற்புரட்டு, பொருட்புரட்டு, வசனப்புரட்டு, பாட்டுப்புரட்டு, இலக்கணப்புரட்டு, தர்க்கப்புரட்டு, சாத்திரப்புரட்டு, சம்பிரதாயப்புரட்டு, சமயப்புரட்டெல்லாம் வெளிப்பட்டனவன்றோ!

கட்டுக்கதாபண்டித!

**தேவாரப்பிரிய**னென்றபேரை மாறுபெயரென்றிகழ்ந்த நமதுவாய் என்படுமோ? அறியேம். அங்ஙனம் இகழ்ந்தநீர் நமதுமாருத அஞ்ஞானசம்பந்தபிள்ளையென்னும் பெயரைமாறியது என்னமதிமயக்கம்? மறைந்துநின்றுபத்திரந்தொடுச்சயாண்டுக்கற்றீர்? முன்னர்ச்சைவஉதயபானுப்பத்திராதிப்பெயரை ஆசிரயித்தும், பின்னர்ச்சுவாமிநாதபிள்ளைப்பெயரை ஆசிரயித்தும் மறைந்துநின்றுதொடுத்தீர். இனிஎப்பெயரை ஆசிரயித்துமறைவீரோ? அறியேம். ஆனால் **இராமசுவாமி** யென்னும்பெயர்கொண்டமையின மறைந்துநின்றுதொடுத்தல்சுபாவந்தானே!!

ஸ்ரீமத் தில்லைநாதபிள்ளை அவர்கள்மேல், இறுமாப்புமுதலியவற்றையாரோபித்து, "வல்லியத்தினைத்துயிலெழுப்புமாறெனத்துணிந்து" எழுந்தமை நமதுகிரகசாரமன்றோ! இற்றைக்குச்சிலகாலத்திற்குமுன் இம்மதுரையாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சற்குருநாதசுவாமிகள் திருமுன்னிலையினும் பிறவிடங்களினும் மேற்குறித்தபிள்ளைஅவர்களைக், கல்வி அறிவொழுக்கங்களால் மிகச்சிறந்தவர்களென்று புகழ்ந்து வாய்ப்பறையறைந்துகொண்டுதிரிந்தனீரோ அன்றோ! இப்போது அதனைமறந்துபோனீரோ? சூரியனை உமதுஉள்ளங்கையால் மறைக்கவல்லீரானால், குறித்தபிள்ளைஅவர்கள் பெருமைகளை நும்போலிப்பத்திரத்தால் மறைக்கவல்லீராவீர். ஆனால், உம்மைநாம்நோவதென்னை? உம்மாலேபுகழப்படாத வித்துவான்கள்யார்? உம்மாலேதிட்டப்படாதவித்துவான்கள்யார்? உம்மாலே புகழப்படாத பிரபுக்கள்யார்? உம்மாலேதிட்டப்படாத பிரபுக்கள்யார்? உமக்குத்திருப்திபிறப்பிக்கயாவரால்முடியும்? குபேரனாலுமுடியாதே. ஐயையோ! பிள்ளாய்! நீரோவயசினாலே மிகமுதிர்ந்துவிட்டீர். தேகமோ அநித்தியம். இப்பிறவிதப்பினால் எப்பிறவிவாய்க்குமோ? யாதுவருமோ? தெரியாதே. ஆதலால், செயற்கரிய சிவபுண்ணியங்களாகிய திருக்கோயில்கட்டுவித்தல், ஜீர்ணோத்தாரஞ்செய்வித்தல், திருநந்தனவனம்வைப்பித்தல, திருமாலைகட்டுவித்தல்; சிவசாத்திரபோதனை. சிவபுராணபோதனை முதலியவற்றைப்பெரிதுமுடைய சந்துக்களை நிந்தித்தலையே நியமமாகக்கொண்டுவாணாளை வீணாளாக்கி எரிவாய்நரகத்துக்கு இரையாகாமல், எடுத்ததேகம்விழுவதற்குமுன்னர்ச்சிவபெருமானையும் மெய்யடியார்களையும்வழிபட்டு அடங்கியொழுகி நற்கதிபெற்றுய்யக்கடவீர்.

"இடையிலேன்கெடுவீர்காளிடறேன்மின்னே" யென்னுந்தேவாரக்கூற்றை, "இடையேன்வினைகாளிடறேன்மின்னே" யெனநும்பத்திரத்திலெழுதியாவராலும் நகையாடப்படும் பெரும்பேதைமையுடையநீர், தேவாரமுழுதையும் பரிசோதித்து அச்சிடமுயன்றமுயற்சி எப்படிப்பட்டதென்பதை அறிவுடையார் உற்றுநோக்காது விடார்! விடார்!!

தேவாரப்பதிப்பின்வழுஉக்களுட்சிலவருமாறு இங்கேகாட்டுதும்;—

திருஞானசம்பந்தமூர்த்திகளது. திருவெண்காட்டுப்பதிகத்தில், "பேயடையாபிரிவெய்தும்" என்னுந்திருவாக்கில் "உள்ளநினைவாயினவெலாம்பெறுவர்" என்பதை "உள்ளநினைவாயினவே வரம்பெறுவர்" என்றும்; திருப்பிரமபுரப்பதிகத்தில், "உளர்கின்றவரவம்" என்னுந்திருவாக்கில், "ஏர்தங்குமலர்நிலவி" என்பதை, "ஏர்தங்கிமலர்நிலவி" யென்றும்; "அடல்வந்தவானவரை" யென்னுந்திருவாக்கில், "பரலாய்த்தென்றுதுன்றும்" என்பதனை" "பாலாய்த்தொன்றுதுன்றும்" என்றும்; திருநாவுக்கரசுசுவாமிகள் திருக்குறுந்தொகையில் "மாசில்வீணையும்" என்பதைமுதலாகவுடையதிருப்பதிகத்தில், "வாழ்த்தவாயுநினைக்க" என்னும்திருவாக்கில் "தாழத்தச்சென்னியும்" எ

ன்பதனைத் "தாழக்கச்சென்னிடும்" என்றும் "நெக்கு நெக்கு நினைபவர்" என்னுஞ்சிவவாக்கில் "நக்குநிற்பனவர்தமை" என்பதனை "நக்குநிற்பரவர்தமை" என்றும் பிறழ்த்திவிட்டீரே. இன்னும்வரம்பில்லனவுள. அவற்றையெல்லாம் பின்னர்வெளிப்படுத்தலின் இவ்வளவோடுவிடப்பட்டது

அற்புதபதிக சரிதத்திலே; ௪௫-வது பக்கத்திலே, "அங்ஙனம்வசிக்குநாளிலே தம்முடையமனைவியாரது அருமைத்திருவயிற்றிலே கருப்பமுண்டாகி ஒருசற்புத்திராதிருவவதாரஞ்செய்தார்" என்றுபிதற்றிவிட்டீரே. வாசகமெழுதுமாற்றலுடையீர்நீரன்றோ! "அவருடையமனைவியாரது" எனற்பாலதனைத்தம்முடையமனைவியாரது" என்றெழுதியநீர் சிங்கத்தையொத்த இலக்கணியன்றோ! "தம்முடையமனைவியாரதுவயிற்றிலே சற்புத்திரர்திருவவதாரஞ்செய்தார்" எனவே "சற்புத்திரருடைய மனைவியாரது வயிற்றில்" எனப்பொருள்பட்டு நுஞ்சற்சிதயுத்தியைவெளிப்படுப்பதை யோர்ந்துணர்க. சிம்புட்புள்ளைச்சிங்கஞ்சீறியதுபோலநீர் ஸ்ரீமத் **தில்லைநாதபிள்ளை**யவர்கள் மேற்சீறியெழுந்ததைநோக்கச்சிறுவர்க்கும் நகைவிளைகின்றதே. இன்னுஞ்சிளம்பிற் பின்னுங்கிளம்புவாமென்க. உம்முடையபகட்டுகள் ஈண்டினிப்பலிக்கவொட்டாம் என்பதைச்சிந்தித்தடங்குதிர.

நுமது நிருவாணதீக்ஷைப்பகட்டும, நைட்டிகப்பிரமசரியப்பகட்டும், சைவப்பகட்டும் ஈண்டுவிரிப்பின் மற்றொன்றுவிரித்தலாகுமென்றெண்ணிவிடுத்தேம்என்பதையும் சிந்திக்குதிர்.

கல்லாவொருவன்தகைமை தலைப்பெய்து
சொல்லாடச்சோர்வுபடும்.
வில்லேருழவர்பகைகொளினுங்கொள்ளற்க
சொல்லேருழவர்பகை.

தாரண ௵
கார்த்திகை ௴
மதுரை.

இங்ஙனம்
வாதிகள்வாயடக்கும்
**வித்துவகோளரி.**

பிழைதிருத்தல்

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௧. | ௫௫. | யென்றிய | யென்றறிய |
| ௨. | ௨௨. | புலம்பினீரே | புலம்பியதாயிற்றே |
| ௩. | ௧௨. | காட்டுவிடுக | காட்டிவிடுக |
| ௧௦ | ௫ | ஸ்ரீசற்குரு | ஸ்ரீ@ஸ்ரீசற்குரு |
| ,, | ௮ | ஸ்ரீசற்குரு | ஸ்ரீ@ஸ்ரீசற்குரு |